**சுருக்கம்**

நிலம்– குத்தகை– திருவள்ளூர் மாவட்டம் –அம்பத்தூர் வட்டம்–நொளம்பூர் கிராமம்– புல எண் 47/1இல் 0.11.5 ஹெக்டேர் நிலம் – பார்வையற்றோருக்கான சேவை புரியும் நேத்ரோதயா நம்பகத்திற்கு (Nethrodaya Trust) 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குதல்-ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

வருவாய்த் துறை

<u>அரசாணை (நிலை)எண்:748</u>

<u>நாள் 20.11.06.</u>

<u>படிக்கவும்:</u>

1. நேத்ரோதயா நம்பகத்தின் நிறுவனர் திரு. சி.கோவிந்தகிருட்டிணனின் மனு நாள்.18.11.2003.
2. நேத்ரோதயா நம்பகத்தின் நிறுவனர் திரு.சி.கோவிந்தகிருட்டிணனின் மனு நாள். 14.9.2005.
3. திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலரின் கடித எண்.16901/2004 நாள்.16.2.05.
4. [illegible] ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண்.இ1/8536/2005 நாள்.14.11.2005.
5. நேத்ரோதயா நம்பகத்தின் நிறுவனர் திரு.சி. கோவிந்தகிருட்டிணனின் மனு நாள்.30.1.2006.
6. அரசு வருவாய்த்துறைச் செயலர், தலைமைச் செயலகம் அவர்களின் 29.10.2006 நாளிட்ட அறிக்கை

------

<u>ஆணை:</u>

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், நொளம்பூர் கிராமம் புல எண்.47/1இல் 0.14.0 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தை பார்வையற்றோருக்கான சேவை புரியும் "நேத்ரோதயா" (Nethrodaya) என்கிற நம்பகத்திற்கு (Trust) அளிக்குமாறு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் நேத்ரோதயா நம்பகத்தின் நிறுவனர் கோரியிருந்தார்.

2. இது குறித்து திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் மேலே மூன்றில் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

(i) இந்த நம்பகம் எந்தவித லாபநோக்கும் இல்லாமல் பார்வை இழந்தவர்களுக்கு சமூக தொண்டினை செய்துவருகிறது. பார்வை இழந்த பட்டதாரிகளுக்கு விடுதிகள் கட்டுதல், தொழில் பயிற்சி மற்றும் பொதுவான வசதிகளை செய்துதரும் மையம் அமைத்தல் தங்களது குறிக்கோள் என்றும், இதற்காக தங்களுக்கு நொளம்பூர் கிராமத்தில் புல எண்.47/1 இல் நிலம் இலவசமாக ஒதுக்கீடு செய்து தந்தால் போதுமானது என்று அம்பத்தூர் வட்டாட்சியரிடம் இந்த நம்பகத்தின் மேலாளர் திரு. கோவிந்தகிருட்டிணன் தெரிவித்துள்ளார்;

(ii) இது தொடர்பாக கிராமத்தில் 19.7.04 அன்று 'அ1' விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை;

(iii) குத்தகைக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலம் அம்பத்தூர் வட்டாட்சியரால் புலத்தணிக்கை செய்யப்பட்டுள்ளது. நிலம் முகப்பேர் பேருந்து நிலையத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. நிலத்தில் மரங்களோ, புராதன சின்னங்களோ இல்லை. உயர் அழுத்த மின்கம்பி ஏதும் செல்லவில்லை;

(iv). "நேத்ரோதயா" நம்பகம் பிரெய்லி நூலகம் மற்றும் ஆய்வு மையம் அமைக்க அரசாணை (நிலை) எண்.86, சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, நாள் 4.6.2004-இல் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது;

(v) "நேத்ரோதயா" நம்பகம், ஒரு அறச் சிந்தனையுடைய பொது நம்பகம் (a public charitable Trust) என்று வருமானவரித்துறை சான்று அளித்துள்ளது; மற்றும்

(vi) சென்னை புறநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒப்படை / குத்தகை வழங்க தடை உள்ளதால், தடையாணையினை தளர்த்தி, நிலத்தை "நேத்ரோதயா" நம்பகத்திற்கு வழங்கலாம் என திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்கண்ட திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், நொளம்பூர் கிராமத்தில், புல எண்.47/1 இல் 0.14.0ஹெக்டேர் மந்தைவெளி புறம்போக்கு என்று வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தை பெயரளவு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து, திரு. "நேத்ரோதயா" நம்பகத்திற்கு குத்தகைக்கு வழங்கலாம் என்று நிலநிர்வாக ஆணையர் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. தற்போது, நேத்ரோதயா நம்பகம், பார்வை இழந்தவர்கள் தங்கி பயிற்சி பெறும் மையத்தை எண்.8, ஸ்பார்டன்நகர், முகப்பேர், சென்னை-37இல், வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. மாத வாடகை ரூ.15,000/- செலுத்தி வருகின்றனர். இந்த பயிற்சி மையத்தையும், நேத்ரோதயா நம்பகத்திற்கு குத்தகைக்கு அளிக்க திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் புல எண்.47/1 இல் உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தையும் வருவாய்த்துறை செயலர் அவர்களால் 29.10.2006 அன்று புலத்தணிக்கை செய்யப்பட்டது. புலத்தணிக்கையின் போது திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர், பொன்னேரி மற்றும் நேத்ரோதயா நம்பகத்தின் நிறுவனர் திரு.கோவிந்தகிருட்டிணன் உடன் இருந்தனர். குத்தகைக்கு உத்தேசிக்கப்பட்ட 0.14.0 ஹெக்டேர் நிலத்தில், நீர் செல்லும்கால்வாய் 0.02.5 ஹெக்டேர் நீங்கலாக, எஞ்சிய 0.11.5 ஹெக்டேர் மட்டும் குத்தகைக்கு வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் ஆகியோரின் அறிக்கைகளை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. குத்தகைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலம் 'மந்தைவெளி புறம்போக்கு' என வகைப்பாடு கொண்டுள்ளதால், குத்தகைக்கு வழங்க அரசாணை (நிலை) எண்.186, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, நாள் 11.12.200ன்படி தடையாணை உள்ளது. மேலும், சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை குத்தகைக்கு வழங்க அரசாணை (நிலை) எண்.959, வருவாய்த்துறை, நாள் 23.6.1987இல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

6. மேற்கண்ட சூழ்நிலையில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை ஏற்றும், வருவாய்த்துறை செயலர் அவர்களின் 29.10.2006 நாளிட்ட மேலே ஆறில் படிக்கப்பட்ட புல ஆய்வறிக்கையின் அடிப்படையிலும் இவ்வினத்தில், நிலம் கேட்கும் நம்பகம்

(Trust) பார்வை இழந்தவர்களால், பார்வை இழந்தவர்களுக்காக நடத்தப்படும் நம்பகம் என்பதாலும், இந்த நம்பகத்தால் சமமான நிலமும் மற்றும் மேம்பாட்டு செலவு கட்டணமும் வழங்க இயலாத காரணத்தால் அரசாணை (நிலை) எண்.186, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, நாள்.11.12.2001 மற்றும் சென்னை புறநகர்ப்பகுதியில், குத்தகைக்கு வழங்க, தடை செய்யப்பட்டுள்ள அரசாணை(நிலை) எண்.959, வருவாய்த்துறை, நாள்.23.6.1987 ஆகிய அரசாணைகளை தளர்வு செய்து( in relaxation of) பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

(i) திரு "நேத்ரோதயா" நம்பகம் தங்களுக்கு பார்வை இழந்த பட்டதாரிகளின் விடுதிகள் மற்றும் Vocational பயிற்சி மற்றும் பொது வசதிகளை செய்து தரும் மையம் அமைத்தல் இவற்றிற்காக நிலம் கோரியுள்ளது என்பதால், திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் வட்டம், நொளம்பூர் கிராமத்தில் மந்தைவெளி புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ள 0.11.5 ஹெக்டேர் நிலத்தை 30 ஆண்டுகளுக்கு வருவாய் நிலையாணை எண்.24A இன் கீழ் உள்ள வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு திரு நேத்ரோதயா நம்பகத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படுகிறது;

(ii) வருவாய் நிலையாணை எண்.24Aஇன் கீழ் உள்ள அதிகாரத்தின்படி, பெயரளவு குத்தகைத் தொகையாக ஆண்டுகுத்தகைத் தொகை ரூ.5,000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என நிர்ணயம் செய்யப்படுகிறது;

(iii) எந்த நோக்கத்திற்காக நிலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கத்திற்காக மட்டும் குத்தகை நிலத்தை பயன்படுத்தவேண்டும்; மற்றும்,

(iv) குத்தகை விதிமுறைகள் மீறப்பட்டால் விதிகளின்படி அரசு நிலம் மீளப் பெற நடவடிக்கை ஏடுக்கப்படும்.

7.மேலே பத்தி (6)இல் கண்டுள்ள ஆணையின்படி, மேல்நடவடிக்கை எடுக்குமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷயா
அரசுச் செயலர்.

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5
மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர் மாவட்டம்,திருவள்ளூர். நகல்
சமூக நலம் மற்றும் சத்துணவதிட்டத்துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் சட்டம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்.சென்னை-9
செயலாளர் வருவாய்த்துறை அவர்களின் தனிச்செயலர்
வருவாய்த்துறை,சென்னை-9
துணைச் செயலாளர்(நிமு) வருவாய்த்துறை அவர்களின்
நேர்முக உதவியாளர் சென்னை-9
✓ திரு.சி.கோவிந்தகிருட்டிணன், ஸ்தாபகர்,